மாலை முரசு நாள் 23/11/18

நொளம்பூர், முகப்பேர் பகுதிகளில் 7-வது மண்டல குடிநீர் வடிகால் வாரிய அலுவலகம் கட்டுப்பாட்டில் பம்பிங் ஸ்டேசன் உள்ளது.

குடியிருப்புகள் அதிகமாக உள்ள பகுதிகள் ஆகும் இது. இந்த பகுதியில் தற்போது 120 குதிரை பவர் உள்ள நீர் வெளியேற்றும் கருவி பயன்பாட்டில் உள்ளது. நீரை அதிகளவில் வெளியேற்ற முடியாததால் 20 மாதங்களுக்கு முன் 180 குதிரை பவர் கொண்ட எந்திரத்தை வைத்தார்கள்.

ஆனால் இதுவரை அது இயக்கப்படவில்லை. சும்மா கிடக்கிறது. அது இயங்கியிருந்தால் சாக்கடை நீர் பெருமளவில் வெளியேற்றப்பட்டிருக்கும். வீட்டிற்குள் சாக்கடை புகுந்துவிட வாய்ப்பிருந்திருக்காது என்று மக்கள் சொல்கிறார்கள்.

மாலைமுரசு நாள் 25.11.2015

## முகப்பேர் கழிவு நீரகற்று நிலையத்தில்

# 180 குதிரைதிறன் பம்ப்செட் இயக்குவதில் தீவிரம்!

## குடிநீர் வாரியம் விளக்கம்!!

சென்னை, நவ. 25-

முகப்பேர் கழிவுநீரகற்று நிலையத்தில் 180 குதிரைதிறன் கொண்ட மின்சார பம்ப்செட் இயக்குவதில் பணிகள் நடைபெற்று வருகின்றன என்று சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரிய செய்திக்குறிப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

பகுதி-7, முகப்பேர் கழிவுநீரகற்று நிலையத்தில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 120 குதிரைதிறன் (எச்.பி.) கொண்ட இரண்டு மின்சார பம்ப்செட்கள் நிறுவப்பட்டு, செயல்பாட்டில் உள்ளன.

மேலும், 180 குதிரை திறன் கொண்ட மின்சார பம்ப்செட்டும் நிறுவப்பட்டுள்ளது. இதனை இயக்குவதற்கான இதர பணிகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன.

இந்நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள 120 குதிரைதிறன் மின்சார பம்ப்செட்டுகள் இரண்டுமே செயல்பாட்டில்உள்ளன.

ஆனால் அவற்றில் ஒன்று மட்டுமே ஒரே சமயத்தில் இயக்கப்படும். மற்றது இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. ஒன்று பழுது அடைந்தால் மட்டுமே மற்றொன்று இயக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.